செய்தி வெளியீடு எண்: 640

06.10.2007

## மகளிர் சுய உதவி குழுக்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

மாநில அளவிலான சுய உதவி குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆண்டுதோறும் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது. சுய உதவி குழுக்களின் தொழில் திறன், உற்பத்திப் பொருட்களின் வகைகள் மற்றும் அவர்கள்தம் ஆற்றலை வெளியுலகுக்கு உணர்த்திடவும், சுய உதவி குழுக்களின் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்திட உதவிட ஓர் வாய்ப்பளிக்கவும் இந்த விற்பனைக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டு (2007–2008) இக் கண்காட்சி சென்னை, பாண்டிபஜாரிலுள்ள "விஜய மகாலில்" அக்டோபர் மாதம் 6–ம் தேதி முதல் 15–ம் தேதி வரை நடைபெற உள்ளது. இக்கண்காட்சி காலை 9.00 மணி முதல் இரவு 8.30 மணி முடிய நடைபெறும். இக்கண்காட்சியில் 30 மாவட்டங்களிலுள்ள சுய உதவி குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள், பொதுமக்கள் பயன் பெறும் வகையில் விற்பனை செய்யப்படவுள்ளது. இவ்விற்பனைக் கண்காட்சியில், கடல் சார்ந்த பொருட்கள், கைவினைப் பொருட்கள், கலைப் பொருட்கள், சணல் பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், பாக்குமட்டையிலான பொருட்கள், காகிதப் பொருட்கள், இயற்கை மூலிகையிலானப் பொருட்கள், தேன், மலைவாழ் மகளிர் தயாரித்த கம்பளி ஆடைகள், கைத்தறி மற்றும் பட்டுப் புடவைகள், கைவேலைப்பாடு நிறைந்த மண் பொம்மைகள், மரச்சிற்பங்கள், வீட்டில் அன்றாடம் பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் விற்பனை செய்யப்படும்.

இவ்வாண்டு விற்பனைக் கண்காட்சியில் மக்களைக் கவரும் சிறப்பம்சமாக கைவினைப்பொருட்கள் தயாரிக்கும் முறைகள் செய்முறை விளக்கத்துடன் காண்பிக்கப்படும். மேலும் தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் முன்னேற்றத்தில் மேற்கொண்ட பணிகள், மற்றும் சுய உதவிக்குழுக்களின் முன்னேற்றத்தின் முக்கிய அம்சங்கள் ஆகியவற்றை விளக்கும் விதமாக தனி அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் சிறப்புப் பொருட்களான பாக்கு மர, பனை மர, வாழை நார்ப் பொருட்கள் மற்றும் கிடைத்தற்கரிய கலைப்பொருட்களை மொத்தமாக வாங்க விழையும் வணிக நிறுவனப் பிரதிநிதிகளும்,

மாவட்ட சுய உதவிக்குழுவினரும் அமர்ந்து வியாபார விவரங்கள் பேசிட அனைத்து வசதிகளுடன் ஓர் தனி அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பொருட்கள் வாங்கும் நுகர்வோரை ஊக்குவிக்கும் விதமாக தினசரி பரிசுத்திட்டம் ஒன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு நாள் ரூ.ஐந்நூறு ரூபாய்க்கான பரிசு ஒன்று தேர்ந்தெடுக்கப்படும் அதிருஷ்டசாலி நுகர்வோருக்கு வழங்கப்படும். இப்பரிசு வழங்கும் விழா கண்காட்சியின் இறுதி நாளன்று நடைபெறும்.

இக்கண்காட்சியை 6.10.2007 அன்று மாலை 5.30 மணியளவில், பாண்டி பஜாரில் உள்ள விஜய மகாலில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் திரு ச.அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது.

---

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.